
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1262**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**168**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த தோப்பூர் திருவேங்கடம் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# தோப்பூர் திருவேங்கடம், தோப்பூரிலிருந்து தென்புலம் வரை...



*1976-ஆம் ஆண்டு பிப்ரவரி 3. அவசரநிலை நெருக்கடியின் இருண்ட நாட்கள். அன்றைய ‘முரசொலி’யில், ‘அண்ணா துயிலுமிடத்திற்கு வர இயலாதோர்’என்ற தலைப்பில், முத்தமிழறிஞர் கலைஞர் ஒரு பட்டியலை வெளியிட்டார். அது சாதாரண பட்டியல் அல்ல. ‘மிசா’ சட்டத்தின்கீழ், சிறையில் அடைக்கப்பட்டிருந்த கழக உடன்பிறப்புகளின் பட்டியல். அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருந்த பெயர்களில் ஒன்று, தோப்பூர் திருவேங்கடம். அவர், ‘கருத்துச் சுதந்திரம் ஏன்?’ என்று எழுதிய கட்டுரைக்காகவும் சிறைப்பட்டவர்.*

*திராவிடர் மாணவர் முன்னேற்றக் கழக முன்னோடி. பேரறிஞர் அண்ணாவுடன் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் திறன் பெற்றிருந்த தம்பி. முத்தமிழறிஞர் கலைஞர் ‘தோப்பூரார்’ எனப் பாராட்டிப் போற்றிய உடன்பிறப்பு.*

*மாணவர் இயக்க முன்னோடி, பத்திரிகையாளர், எழுத்தாளர், சட்டமன்ற உறுப்பினர் எனப் பல பரிமாணங்களைக் கொண்ட கழகத் தளகர்த்தர். அவரது வாசிப்புத் திறனும், மொழி ஆளுமையும் அண்ணாவின் கவனத்தை ஈர்த்ததாக மூத்த கழக முன்னோடிகள் நினைவுகூர்ந்துள்ளனர்.*

*1938-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13-ஆம் நாள், அன்றைய வடஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டத்தைச் சேர்ந்த தோப்பூர் கிராமத்தில் தர்மலிங்கம்-தனம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.*

*தொடக்கக் கல்விக்குப் பின்னர், சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்ற அவர், மாணவப் பருவத்திலேயே தமிழ் மொழியின்மீது ஈடுபாடு கொண்டிருந்தார். பள்ளியில் நடைபெற்ற கட்டுரைப் போட்டிகளில் பரிசு பெற்றது, அவரது எழுத்தாற்றலின் தொடக்கமாக இருந்தது. பின்னர், பச்சையப்பன் கல்லூரியில் வரலாற்றை முதன்மைப் பாடமாக எடுத்து முதுகலைப் பட்டம் பெற்றார். அந்தக் காலத்தில், அவருக்குப் பேராசிரியராக இருந்து வழிநடத்தியவர்தான் கழகத்தின் ‘இனமானப் பேராசிரியர்’ க.அன்பழகன். திருவேங்கடம் அவர்களின் அரசியல் சிந்தனையைச் செம்மைப்படுத்திய ஆசிரியராகவும் நம் பேராசிரியர் இருந்தார்.*

### மாணவர் இயக்கத் தோழமைகள்

*கல்லூரியில் படிக்கும் காலத்தில் பேரறிஞர் அண்ணாவின் பேச்சு, அவரைப் பொதுவாழ்வின் பாதைக்கு அழைத்துச்சென்றது. அதன் விளைவாக ‘திராவிடர் மாணவர் முன்னேற்றக் கழக’த்தின் செயல்பாடுகளில் பங்குபெறலானார். அதன் முக்கியப் பொறுப்பாளராகத் திகழ்ந்தவர், வடஆற்காடு மாவட்டம் முழுவதும் மாணவர் இயக்கத்தை விரிவுபடுத்துவதில் தீவிரமாகச் செயல்பட்டார். வடஆற்காடு மாவட்ட மாணவர் தி.மு.க.வின் முதல் மாநாட்டை முன்னின்று நடத்தி, பேரறிஞர் அண்ணாவிடம் பாராட்டைப் பெற்றவர்.*

*இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் முன்னணித் தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பின்னாளில், கழகத்தின் முக்கியத் தலைவர்களாக உயர்ந்த எல்.கணேசன், இன்றைய பொதுச்செயலாளர் துரைமுருகன் உள்ளிட்டோருடன் சமகாலத் தோழராக மாணவர் அரசியல் இயக்கத்தில் பெரும் பங்காற்றியவர்.*

*1969-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த வடஆற்காடு மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய தோப்பூர் திருவேங்கடம், கணியம்பாடி, அணைக்கட்டு, ஒடுக்கத்தூர், குடியாத்தம் பகுதிகளில் கழக வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தார்.*

*1970-ஆம் ஆண்டு, வேலூர் கோட்டை வெளியில் நடைபெற்ற வடஆற்காடு மாவட்ட தி.மு.க. மாநாட்டைச் சிறப்பாக ஒருங்கிணைத்து, கலைஞரிடம் பாராட்டைப் பெற்றவர்.*

*கழக அமைப்புப் பணியுடன் மக்கள் பிரதிநிதிப் பணியிலும் படிப்படியாக உயர்ந்தவர் திருவேங்கடம். ஒடுக்கத்தூர் பேரூராட்சித் தலைவராகப் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் வெற்றிபெற்றார். ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தலைவராகவும், வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றி, கூட்டுறவுத் துறையிலும் தனது நிர்வாகத் திறனைச் சிறப்பாக வெளிப்படுத்தினார்.*

*1971-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், கணியம்பாடி தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினரானார். 1971-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை சட்டமன்றத்தில் தொகுதியின் குரலாகப் பணியாற்றிய அவர், பின்னர் சட்டமன்ற நிதிக்குழுத் தலைவராகவும், தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறையின் துணைத் தலைவராகவும், தமிழ்நாடு சர்க்கரை ஆலை கூட்டமைப்பின் தலைவராகவும் பொறுப்பேற்றார்.*

### தென்புலம் வழி பேசியவர்

*அரசியல் பொறுப்புகளோடு எழுத்துப் பணியையும் அவர் கைவிடவில்லை. 1972-ஆம் ஆண்டு, ‘தென்புலம்’ என்ற மாத இதழைத் தொடங்கி, திராவிட இயக்கச் சிந்தனைகள், அரசியல் விவாதங்கள், சமூகக் கருத்துகளை மக்களிடம் கொண்டுசேர்த்தார்.*

*1976-ஆம் ஆண்டில், ‘மிசா’ நெருக்கடி காலத்தில் ‘தென்புலம்’ இதழில் அவர் எழுதிய ‘பத்திரிகைச் சுதந்திரம் ஏன்?’ என்ற கட்டுரைக்காக, ‘மிசா’ சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் ஓராண்டுக்காலம் அடைக்கப்பட்டார்.*

*1977-ஆம் ஆண்டில், வேலூர் சட்டமன்றத் தொகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிலையில், தனக்குப் பொறுப்பு கிடைப்பதைவிட, தனக்குப் பின்னால் வருபவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என மாவட்டச் செயலாளர் தேவராஜ் அவர்களுக்கு விட்டுக்கொடுத்தவர். பதவியைவிட, இயக்க வளர்ச்சியே முக்கியம் எனப் பேரறிஞர் அண்ணாவிடம் கற்ற அரசியல் பண்பினை அன்று வெளிப்படுத்தினார்.*

*அதே காலகட்டத்தில், திராவிட இயக்க வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணியிலும் அவர் தீவிரமாக ஈடுபட்டார். 1982-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் பன்முகத் திறமையை எடுத்துரைக்கும் ‘முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர்’ என்ற நூலை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய ‘இளைய தலைமுறையின் எழுச்சி முரசம்’, ‘பேரறிஞரின் பேருரைகள்’ உள்ளிட்ட நூல்களையும் தொகுத்து வெளியிட்டார். 2003-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணாவின் ‘மே தின’ உரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டதும், அவரது ஆவணப் பணியின் தொடர்ச்சியாக அமைந்தது.*

*“அரசியல் மேடையில் பேசியவர் மட்டுமல்ல, அரசியல் வரலாற்றை எழுதிய தோப்பூர் திருவேங்கடத்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக மட்டும் நினைவுகூர முடியாது. மாணவர் இயக்கத்தில் தொடங்கி, மாவட்டக் கழகத்தை வழிநடத்தி, சட்டமன்றத்தில் மக்களின் குரலாக ஒலித்தவர், கருத்துச் சுதந்திரத்திற்காக மிசாவில் சிறை சென்றவர்” எனக் குறிப்பிடுகிறார், அவரிடமிருந்து அரசியல் பயின்ற வேலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், முகம்மது சகி.*

*வயது மூப்பு காரணமாக, நேரடி கழகப் பணிகளைக் குறைத்துக்கொண்டிருந்த நிலையில், உடல்நலக் குறைவு காரணமாக, 2023-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். திராவிட இயக்க வரலாற்றை ஆவணப்படுத்தும் வகையில் அவர் எழுதிய நூல்கள், நூற்றாண்டு வரலாற்றைப் பேசிக்கொண்டிருக்கும்.*

*திராவிட இயக்கத்தின் வரலாறு, தலைவர்களின் வரலாறு மட்டுமல்ல. அதை எழுதிப் பாதுகாத்த எழுத்துப் போராளிகளின் வரலாறும்கூட. அந்தப் பட்டியலில், தோப்பூர் திருவேங்கடம் என்ற பெயர் என்றும் தனித்த இடத்தைப் பெற்றிருக்கும்.*

**“திராவிட இயக்கத்தின் வரலாறு, தலைவர்களின் வரலாறு மட்டுமல்ல. அதை எழுதிப் பாதுகாத்த எழுத்துப் போராளிகளின் வரலாறும் கூட.”**

...துடிக்கும்

## பத்திரிகையாளர்களை அச்சுறுத்தும் பயம்!

தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சியைக் கலைக்க, சதி நடந்ததாகத் திட்டமிட்டு பரப்பப்பட்ட ஒரு வழக்கில், தற்போது த.வெ.க. அரசின் காவல் துறை, பத்திரிகையாளர்களை அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது. ‘இந்த வழக்கின் விசாரணைக்காக அழைக்கிறோம்’ எனப் பத்திரிகையாளர் விஜயன் அவர்களை 15.07.2026 அன்று இரவு, திருவல்லிக்கேணி காவல் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைத்துச்சென்று, அவரது செல்போனைப் பறிமுதல் செய்ததுடன், மீண்டும் 16.07.2026 விசாரணை என்கிற பெயரில், முழு நாளும் அலைக்கழித்துள்ளனர். இது மனித உரிமை மீறல் மட்டுமல்ல, பத்திரிகைச் சுதந்திரத்தின் மீதான நேரடித் தாக்குதல் என ஜனநாயக சக்திகள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

காவல் துறைக்கு விசாரணை நடத்தும் உரிமைச் சட்டத்தின் வரம்புக்குள், நியாயமான வழிமுறைகளுடன், மனிதாபிமானத்துடன் செயல்பட வேண்டும். ‘இரவு நேர அழைப்புகள்’, ‘தொடர் தொல்லை’, ‘உத்தரவு இன்றி செல்போன் பறிமுதல்’ - இவை அனைத்தும் உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்கள் பலமுறை கண்டித்துள்ள செயல்கள். பத்திரிகையாளர்களின் தொலைபேசிகளில் தனிப்பட்ட உரையாடல்கள், செய்தி ஆதாரங்கள், தொடர்புகள் அடங்கியிருக்கும். அவற்றை எந்த விதிமுறையும் இன்றிப் பறிப்பது என்பது பத்திரிகையாளர்களை மிரட்டி, அவர்களின் செயல்பாட்டை முடக்குவதற்கான திட்டமிட்ட நடவடிக்கை.

‘சட்டமன்றத்தில் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளைச் செய்தியாக்கும் பத்திரிகையாளர்களை இப்படி நடத்துவது, எதிர்க்கட்சிகளின் குரலை நசுக்க முயல்வதாகவே தெரிகிறது. தமிழ்நாடு போன்ற ஜனநாயக மரபுகள் கொண்ட மாநிலத்தில் இத்தகைய அராஜகம் நடைபெறுவது வேதனையளிக்கிறது’ என சென்னை பத்திரிகையாளர் மன்றம் இந்த நடவடிக்கையைக் கண்டித்துள்ளது.

பயம் எல்லாவற்றையும் சந்தேகம் கொள்ளும்.

## ஃப்ளாஷ்பேக்

### ‘மிசா’ காலத்தில், தலைவருடன்...



பெ.சு.செல்வராசன்



1974-ஆம் ஆண்டில், கழக அரசு மீதும், கலைஞர் மீதும் எம்.ஜி.ஆர். சுமத்திய பொய்க் குற்றச்சாட்டின் அடிப்படையில், ‘சர்க்காரியா கமிஷன்’ அமைக்கப்பட்டது. ‘அந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்’ என்பதைத் தகுந்த ஆதாரங்களுடன் விளக்கும் நூலினைக் கழகத் தலைவர் அப்போது வெளியிட்டார். அந்த விசாரணைக் கமிஷனை எதிர்கொள்ள ‘வழக்கு நிதி’ திரட்டப்பட்டபோது, 1976-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ஆம் தேதி, கழகத் தலைவர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, ‘வழக்கு நிதி’ வழங்கினேன். ‘மிசா’ நெருக்கடி காலத்தில் எடுக்கப்பட்ட படம். பொய்ப்புகார் கொடுத்தவர்கள், அந்த வழக்கின் குறுக்கு விசாரணைக்கு வரவே இல்லை. ‘எனக்கு எதுவும் தெரியாது’ எனப் பின்வாங்கி விட்டனர் என்பது வரலாறு.

**– பெ.சு.செல்வராசன், முன்னாள் துணைத் தலைவர், மாநகர மன்றக் கழக உறுப்பினர் குழு, இரத்தினபுரி, கோயம்புத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வேர்கள் / நல்வருக

### அபராதத் தொகைக்குப் பொருட்கள் ஜப்தி!

1957-ஆம் ஆண்டில், கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின்போது, கைதுசெய்யப்பட்ட பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட தலைவர்கள் குற்றவாளிகள் என 1958-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி, சென்னை மாகாண இரண்டாவது நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. ‘எல்லோரும் குற்றவாளிகள் என்றும் ‘ரூ.25 அபராதம் கட்ட வேண்டும்’ என்றும் தண்டனை விதிக்கப்பட்டது. ‘அபராதம் கட்டத் தவறினால், மேலும் 10 நாட்களுக்குச் சிறை’ எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. தலைவர்கள் அபராதம் செலுத்த மறுத்து, சிறை சென்றனர். இரண்டு நாட்களுக்குப் பின்னர், விடுதலை செய்யப்பட்டனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு, அபராதத் தொகையை வசூலிக்க, தலைவர்களின் இல்லங்களில் உள்ள பொருட்களை ஜப்தி செய்து ஏலம் விட்டு, ஆட்சியர்கள் அபராதத் தொகையை வசூலித்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900